# <u>குழித்துறை நகராட்சி</u>

<u>குழித்துறை நகர்மன்றத்தின் **அவசரக்கூட்டம்** 23-05-2025 **வெள்ளிக்கிழமை மாலை** 3.30 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தின் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்</u>

<u>நகர் மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>

1) குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தின் உள் மற்றும் வெளி பகுதியிலுள்ள மின்கம்பங்களில் மின்விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1329 தீர்மானிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.1</u>

தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 (திருத்தம்) 2022 பிரிவு 80-ல் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் 13-04-2023 முதல் கல்விவரி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் கல்விவரி விதிக்க ஏதுவாக நகர்மன்ற தீர்மான எண்.863, நாள் 13-06-2024-ன்படி சொத்துவரியில் ஆண்டு வாடகை மதிப்பில் ஆண்டிற்கு 5% கல்விவரி வசூல் செய்ய தீர்மானிக்கப்பட்டு அது குறித்து 20-09-2024 அன்று தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதில் கல்விவரி சம்மந்தமாக பொதுமக்களிடமிருந்து எவ்வித ஆட்சேபனையும் முறையீடுகளும் எழுத்து மூலமாக பெறப்படவில்லை. எனவே சொத்துவரியில் கல்விவரி விதித்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு :- மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்**.706/2024/அ1

மன்றத்தீர்மான எண்.1330, தீர்மானிக்கப்பட்டது.

ஒப்பம்/- திரு.பொன். ஆசைத்தம்பி,
நகர் மன்றத்தலைவர்,
குழித்துறைநகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.